**<u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>**

O.S.No.7/2023 தேதி- 23.01.2026
(P.W.1) -ஜார்ச்ஸ்டீபன்சன்

**1** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. 1 ஆம் பிரதிவாதியின் தகப்பனாரான ரசல்ராஜ் 6 1/2 சென்ட் சொத்தை பால்தங்கம், தங்கராஜ், விஜயகுமாரிடம் இருந்து வாங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 2005 ஆம் ஆண்டு 1 ஆம்பிரதிவாதியின் தகப்பனார் மேற்சொன்ன 6 1/2 சென்ட் சொத்தை விலைக்கு வாங்கிய விவரம் தெரியும் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புதிய புல எண்.118/14 முதலில் தங்கையன் நாடார் என்பவருக்கு உரிமைப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்சொன்ன தங்கையன் நாடார் எனக்கு சித்தப்பா முறை என்றால் இல்லை. மேறசொன்ன தங்கையன் நாடார் எனக்கு உறவினரா என்றால் தெரியாது. மேற்சொன்ன தங்கையன்நாடாருக்கு அலங்காமணி மற்றும் செல்லையன் என்ற 2 பிள்ளைகள் என்றால் சரியல்ல, வேறு சில பிள்ளைகள் உண்டு. புதிய புல எண்.118/14 -ல் உள்ள சொத்து தங்கையன் நாடார் காலத்திற்கு பிறகு அலங்காமணி மற்றும் செல்லையன் ஆகியோர் பிரித்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான்.

2. புதிய புல எண்.118/14 சொத்தில் என் அப்பாவிற்கு ஆதியில் எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். புதிய புல எண்.118/14 உள்ள சொத்திற்கு அ-பதிவேட்டில் தங்கையன் நாடார் பெயர் தான் முதலில் உள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. புதிய புல எண்.118/14 வடக்கு பகுதியை அலங்காமணிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. புதிய புல எண்.118/14 வடக்கு பக்க சொத்தை அலங்காமணி கைவசம் வைத்து அனுபவம் செய்து வந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. புதிய புல எண்.118/14 -ல் அலங்காமணி கல்லறை இருப்பது பற்றி தெரியுமா என்றால் 3 கல்லறைகள் உள்ளது. அது யாருடைய கல்லறை என்று தெரியாது. மேற்சொன்ன கல்லறைக்கு வடக்கு பக்கம் உள்ள 7 1/2 சென்ட் சொத்தை தான் ரசல்ராஜ் விலைக்கு வாங்கினார் என்றால் அதுபற்றி தெரியாது. புதிய புல எண்.118/15 உள்ள சொத்து என் அப்பாவிற்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான். புதிய புல எண்.118/13 உள்ள சொத்து என் அப்பாவிற்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான். புதிய புல எண்.118/13 மற்றும் புதிய புல எண்.118/15 ரோட்டை தொடாது என்றால் சரிதான். புதிய புல எண்.118/15, புதிய புல எண்.118/13 இடையில் தான் பிரதிவாதி கண்டம் புதிய புல எண்.118/14 உள்ளது என்றால் சரிதான்.

3. புதிய புல எண்.118/15 உள்ள சொத்திற்கு செல்லவேண்டும் என்றால் புதிய புல எண்.118/14 வழியாக தான் செல்ல முடியும் என்றால் இல்லை. புதிய புல எண்.118/15 வடக்கு பக்கம் யாருடைய சொத்து உள்ளது என்றால் தேவதாஸ் மற்றும் தேனி சொத்துள்ளது. புதிய புல எண்.118/15 உள்ள சொத்துகள் எல்லாம் வீடு உள்ள கண்டம் என்றால் சரிதான். 3 ஆம் பிரதிவாதி என் மனைவி என்றால் சரிதான். புதிய புல எண்.118/14 பட்டாவில்3 ஆம் பிரதிவாதியின் பெயர் தான் 2018 -ல் தான் சேர்க்கப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. புதிய புல எண்.118/14 -ல் என் மனைவிக்கு எவ்வாறு உரிமை வந்தது என்றால் அது விலைக்கு வாங்கிய சொத்தாகும். மேற்சொன்ன சொத்து யாரிடம் இருந்து கிரையம் பெற்றனர் என்றால் ரீத்தாகுமாரி என்பவரிடம் இருந்து விலைக்கு என் மனைவி வாங்கினார். மேற்சொன்ன சொத்துக்கு புதிய புல எண்.118/14 பட்டாவில் உள்ள என் பெயர் 2018 -ல் வட்டாசியரிடம் மனு கொடுக்கப்பட்டு சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். மேற்சொன்ன கணினி வழி பட்டா பி.வா.சா.ஆ.1 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது. பொதுவாக பட்டாவில் பெயர் சேர்க்க வேண்டும் என்றால் ஏதாவது ஒரு ஆவணத்தின் அடிப்படையில் தான் பெயர் சேர்க்க முடியும் என்றால் சரிதான்.

4. 2018 -ல் என் மனைவி பெயருக்கு நான் எழுதியக்கொடுத்த சொத்து புதிய புல எண்.118/14 -ல் 7 1/2 சென்ட் சொத்து அளந்து பார்த்து தான் எழுதினேன் என்றால் நினைவில்லை. மேற்சொன்ன ஆவணத்துடன் வரைபடம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன வரைபடம் அளந்து பார்த்துதான் ஏற்படுத்தப்பட்டது என்றால் நினைவில்லை. மேற்சொன்ன செட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் முதல் பெயர் தங்கையன்நாடார் ஆகவும், 6-வது பெயர் 1-ஆம் பிரதிவாதியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டாவில் 1-ஆம் பிரதிவாதியின் பெயர் சேர்க்கப்ட்ட பிறகு தான் 7-வது பெயராக என்னுடைய பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய பட்டிகை சொத்தில் 15 ஆண்டுக்கு முன் தான் ரப்பர் மரங்கள் நடப்பட்டது என்றால் 8 ஆண்டுகளுக்கு முன்பு நடப்பட்டது.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).